**தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 13 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்டச் செயலகம் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கவில்லை.

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்குரிய நிதியல்லாச் சொத்துக்களின் மீதியை திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் அச் சொத்துக்களின் ஆரம்ப மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 1,672,745 இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றிலுள்ள ஆரம்ப மீதிகளின் கூட்டுமொத்தமானது நிதி நிலைமைக் கூற்றிலுள்ள அச் சொத்துக்களின் மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 8,375,267 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இந்த பிழை தவறுதலாக ஏற்பட்டிருந்ததுடன் தொடர்ந்துவரும் ஆண்டில் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களிலுள்ள நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியானது திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுட்டிக்காட்டப்பட்ட குறித்த சொத்துக்களின் மீதிப் பெறுமதியை விட ரூபா 3,945,967 ஆல் அதிகரித்துக் | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

காட்டப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் இன்றி பூநகரி பிரதேச செயலகத்தினால் 20 பணம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்களுக்கு ரூபா 3,294,792 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட ஆவணங்கள் கோவைகளில் காணப்பட்டதால் அவை பணம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பணம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்களுடன் சேர்த்து அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு தற்போது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பணம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்களுடன் சேர்த்து கொடுப்பனவுகளிற்கான கணக்காய்வு சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியிடம் மாவட்ட செயலகத்தினால் விண்ணப்பிக்கப்பட்ட ரூபா 1,226,284,861 தொகையான கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கும் திட்டமிட்டவாறு செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் முடியாதிருந்தது. | திறைசேரியிடமிருந்து கட்டுநிதிகள் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், தொடர்புடைய கொடுப்பனவுகளை கையிலுள்ள விலைப்பட்டியல்களாக சுட்டிக்காட்டுவதன் மூலம் தற்போதைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 மூலதன செலவின விடயங்கள் தொடர்பாக மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 27 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,709,145 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக கூறுவிலைகளை கோருவதன் மூலம் திட்டமிடுவதில் சிக்கல்கள் காணப்பட்டன. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை திருப்திகரமான மட்டத்தில் மேற்கொள்வதற்கு திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| | | வேண்டும். |
| (ஆ) 09 மீண்டெழும் செலவின விடயங்கள் தொடர்பான ஆரம்ப நிதியேற்பாட்டில் சேமிப்புக்கள் 01 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 07 ஏனைய செலவின விடயங்கள் தொடர்பான ஆரம்ப நிதியேற்பாட்டில் மேலதிகமானது 01 சதவீதம் முதல் 26 சதவீதம் வரையான விச்சில் காணப்பட்டது மேலும், முழு நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்த ஒரு செலவின விடயம் காணப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக மேலதிக செலவினங்கள் அதிகரித்திருந்தன. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான முற்பண கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் சேவையை விட்டு விலகிய மற்றும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 820,425 மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு முறையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதி பிரமாணம் 571 இன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 5,424,688 கூட்டுமொத்தமான 36 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து | குறிப்பிட்ட வைப்புக்களை விடுவிப்பதற்கும் குறிப்பிட்ட | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| பெறப்பட்ட ரூபா 3,274,966 தொகையானது 01 மற்றும் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக்களை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் மீதமுள்ள வைப்புக்களிலிருந்து செயற்திட்டங்களைத் தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 05/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலின் 4.11 ஆம் பந்திக்கு முரணாக 2021 ஆம் ஆண்டில் ரூபா 874,403 மீண்டெழும் செலவினம் மற்றும் ரூபா 2,818,046 மூலதனச் செலவினம் என்பன தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | கொவிட் 19 தொற்றுநோயின் விளைவாக உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாததன் காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டுநிதிகள் பெறப்படாததன் காரணமாக மூலதனச் செலவினங்களை செலவிடுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தவறியதால் பொறுப்புக்களுக்காக ரூபா 100,823,363 தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. | கட்டுநிதிகள் பெறப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு கடப்பாடுகளாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பொறுப்புக்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.6 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 54 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 95 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது சேமிக்கப்பட்டிருந்தது. | பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் சமூக நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பெரும்பாலான நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்த போதிலும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அவற்றை நடாத்த முடியாதிருந்தது. | தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

**2.7 கணக்கீட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோர் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தேவைப்படுத்தப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் பதில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 36,773,749 பெறுமதியான 09 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பதில்கள் முறையாக வழங்கப்படும் என்பது உறுதி செய்யப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | | |
| | **ரூபா** | | | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | | |
| (i) நிதிப்பிரமாணம் 260(i) மற்றும் 389(அ) | 546,684 | பூநகரி பிரதேச செயலகத்தினால் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பணம் பெறுபவருக்கு வழங்குவதற்குப் பதிலாக விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் காசோலைகளைப் பெற்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அத்தகைய காசோலைகளை வங்கியில் வைப்புச் செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | (ii) | நிதிப்பிரமாணம் 371(2) | 340,550 | உரிய நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட உப கட்டுநிதிகள் தாமதத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக உரிய காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (iii) | நிதிப்பிரமாணம் 754 | - | வருடாந்தம் பொருளிருப்பு புத்தகத்தை சமப்படுத்துவதற்கான நடைமுறை எதுவும் காணப்படவில்லை. | எதிர்காலத்தில் அதனை முறையாக சமப்படுத்துவதற்கு விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | - | 09 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுக்கான பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | | காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் | | | | |
| | (i) | 2017 யூலை 04 ஆம் திகதிய 2017/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | | அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆதனங்களைப் பயன்படுத்தி 08 மற்றும் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 169 வணிக நிறுவனங்கள் செயற்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், ஆதனங்களை வைத்திருப்பவர்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நில அளவைத் திணைக்களத்திற்குத் திட்டங்களைத் தயாரிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க அதற்கான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய | 7,875,400 | 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை குத்தகைக்கு | அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகைகள் மற்றும் குத்தகை |

| | | |
|---|---|---|
| 96/05 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் 5 (iii) மற்றும் 6 (இ) பந்திகள் | வழங்கப்பட்ட காணிகளில் இருந்து ரூபா 7,875,400 தொகையான நிலுவைக் குத்தகை வாடகைகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாடகைகள் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 2.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### சான்றுறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் பூநகரி பிரதேச செயலகத்தினால் ரூபா 1,972,810 பெறுமதியான பணம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்கள் நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பூநகரி பிரதேச செயலகத்தின் பணம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்கள் தற்போது சான்றுறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்ட பதில் தெளிவாக இருக்கவில்லை. | அனைத்து கொடுப்பனவுகளும் நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 2.10 வங்கி கணக்கு செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணங்கள் 137 மற்றும் 138 இற்கு முரணாக ரூபா 2,765,485 பெறுமதியான பதினெட்டு காசோலைகள் பொருட்களைப் பெறுவதற்கு முன்னர் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் எழுதப்பட்டு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. | அனைத்து காசோலைகளும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு அவை மாற்றப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நான்கு தவணைகளில் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுவதனாலும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாகவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் 2020 திசெம்பரில் பூர்த்தி செய்யப்படுவதற்கு அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் ரூபா 5.1 மில்லியன் பெறுமதியான மூன்று செயற்திட்டங்களும் ரூபா 394,803 கிரயமான செயற்திட்டங்களும் 2021 யூன் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை காலப்பகுதியினுள் அனைத்து செயற்திட்டங்களையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 14 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கையானது பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உரிய திகதிக்கு முன்னர் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அதனை உரிய திகதியில் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. மேலதிக பிரதி 2021 பெப்ரவரி 24 இல் உப கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 செயற்திட்டங்களின் குறைப்பயன்பாடுடைய அல்லது விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 28,756,571 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் 02 வருட காலத்திற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்தன. | அவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எண்ணெய் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தனியாருடன் இணைந்து நெல் ஆலையை செயற்படுத்துவதன் மூலம் உற்பத்தி நடவடிக்கைகள் | உரிய சொத்துக்களை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.5 பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2019 மார்ச் 23 ஆம் திகதிய 07/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி பிரதேச செயலகங்களில் உள்ள 04 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கரைச்சி பிரதேச செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டில் 03 வணிக நிறுவனங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,671,969 பெறுமதியான சந்தேகத்திற்கிடமான கொள்வனவுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக 2020 செப்தெம்பர் மாதம் நியமனம் செய்யப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை கணக்காய்வுக்குக் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விசாரணை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | விசாரணைகளை பூர்த்தி செய்த பின்னர் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | பெறுகை மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் உத்தியோகத்தர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 13,500 மேலதிகக் கொடுப்பனவுகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக தீர்மானங்களை எடுப்பதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. | உரிய தரப்பினரிடம் இருந்து மேலதிக கொடப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாடசாலையை சுற்றி சுவர் நிர்மாணிப்பதற்காக ரூபா | அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | மேலதிகக் கொடுப்பனவுகள் |

| | | |
|---|---|---|
| 142,988 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டு வருகிறது. | அறவிடப்பட வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அது தொடர்பான இலக்குகள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை . திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு அடைந்து கொள்ளப்பட வேண்டும். |

**5. நல்லாளுகை**

**5.1 பொதுமக்களிற்கானசேவைகளை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் பூநகரி பிரதேச செயலகத்தினால் ரூபா 3,960,000 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட மூன்று கிரவல் வீதிகள் குறுகிய காலப்பகுதியினுள் அதாவது 2021 மார்ச் மாதத்திற்குள் மிகவும் பாழடைந்துள்ளதுடன், இதனால் பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். ஆனால், அதற்கான சாதகமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வீதிகளின் நிர்மாணங்கள் பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அது தொடர்பான அறிக்கை பிரதேச சபையிடமிருந்து கோரப்பட்டுள்ளது. | வீதிகள் முறையாக நிர்மாணிக்கப்பட வேண்டும். |

**6. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மாவட்ட செயலகம் | அதிகபட்சமாக ஐந்து ஆண்டு காலம் பணிபுரிந்த உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். எனினும் அதற்கிணங்க விண்ணப்பிக்காத உத்தியோகத்தர்கள் இடமாற்ற சபையால் இடமாற்றம் | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பூநகரி பிரதேச செயலகத்தில் பணியாற்றுகின்ற 74 உத்தியோகத்தர்கள், 06 வருடங்கள் முதல் 23 வருடங்கள் வரையான காலப்பகுதியில் ஒரே நிலையத்தில் சேவையாற்றி வருகின்றனர். | செய்யப்படுவர். | |
| (ஆ) | தேவப்பாட்டின் பிரகாரம் 51 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக அடுத்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |